# முன்னுரை

# முன்னுரை

## ஆய்வுத் தலைப்பு

"ராஜம் கிருஷ்ணன், வல்சலா நாவல்களில் பாதிக்கப்பட்டோர் – ஓர் ஒப்பீட்டாய்வு" என்னும் தலைப்பில் இவ் ஆய்வு அமைந்துள்ளது.

## ஆய்வுப் பொருள்

இரு மொழி இலக்கிய ஆசிரியர்களின் படைப்புகளை ஒப்பிடு–வதனால் உள்ள பயன்களும் ஆளுமையின் வெளிப்பாடாக அமைந்துள்ள சிறந்த பெண் தலைமைப் பாத்திரங்களும், பிற தலைமைப் பாத்திரங்களும், அந்தந்த சமுதாய மக்களிடையே நிலவிய நம்பிக்கைகளும் சடங்குகளும், நாவல்கள் காட்டும் சமுதாயமும் ஆய்வுப் பொருளாக அமைகின்றன.

## ஆய்வு நோக்கம்

தமிழகத்தைச் சார்ந்த ராஜம் கிருஷ்ணனும் கேரள மண்ணைச் சார்ந்த வல்சலாவும் சமுதாயத்தில் குரல் கொடுக்க முடியாமல் தவிக்கும் ஏழைகளின் அவலக்கதையினை தங்கள் நாவல்கள் வழி வெளி உலகிற்குத் தெரியப்படுத்தினர்.

ராஜம் கிருஷ்ணன் பல்வேறு இடங்களுக்கும் சென்று அங்கு வாழும் மக்களின் வாழ்வு நிலையை உணர்ந்து கொண்டவர். மனிதநேயம் தான் அடிநாதமாக அவருடைய நாவல்களில் இழையோடுகிறது. மனிதகுலம்

மேம்பாடடைய வேண்டும்; அதற்கெதிரான தளைகள் தகர்த்தெறியப்பட வேண்டும் என்றெண்ணி அம்மக்களை தன் படைப்புக்களில் இனங்காட்டினார் ராஜம் கிருஷ்ணன்.

அடியான், அடியாத்திகள் என முத்திரை குத்தப்பட்டவர்கள் வாடி வதங்கி ஒரு மூலையில் கிடப்பதைப் பார்த்த வல்சலா, அவர்களின் நிலைமையை உலகறியச் செய்தார். அவர்களுக்கு அவர்களே சொந்தமில்லாத ஒரு நிலை. இந்தச் சமுதாயத்தில் வாழும் அவர்களும் மற்று மனிதர்களைப் போல் வாழவேண்டும் என்ற எண்ணமே வல்சலாவின் படைப்புகளில் வெளிப்படுகின்றன.

இரு நாவலாசிரியர்களினுடையவும் சமூக முற்போக்குச் சிந்தனைகளை ஆராய்ந்து ஒப்பிட்டு, தமிழ் இலக்கியம் பயன்பெறும் வகையில் உண்மை நிலையை வெளியிடுவது மிக அவசியம். இந்த அடிப்படையில் ராஜம் கிருஷ்ணனின் தமிழ் நாவல்களும் வல்சலாவின் மலையாள நாவல்களும் காட்டும் வாழ்வின் எதார்த்த நிலைகளை ஒப்பிடுவதே இவ் ஆய்வின் முக்கிய நோக்கம்.

## ஆய்வு முன்னோடிகள்

ராஜம் கிருஷ்ணனின் நாவல்களில் முனைவர் பட்ட ஆய்வேடுகள் பல வந்துள்ளன. வல்சலாவின் நாவல்களில் ஒரே ஒரு முனைவர் பட்ட ஆய்வேடு தான் வந்துள்ளது. ஆனால் இவ்விரு மொழி நாவலாசிரியர்களினுடையவும் படைப்புக்களை ஒப்பீட்டு முறையில் முனைவர் பட்டத்திற்கு ஆய்வு செய்வது இதுவே முதல் முறை. இவ் ஆய்வாளர்

எம்.ஃபில். பட்ட ஆய்விற்கு ராஜம் கிருஷ்ணனின் குறிஞ்சித்தேன் நாவலையும் வல்சலாவின் நெல்லு நாவலையும் அறிமுகப்படுத்தி ஒப்பீட்டு முறையில் சிறு ஆய்வு மேற்கொண்டிருந்தார்.

## ஆய்வு எல்லை

சமூகப் பிரச்சனைகளைப் பேசும் நாவல்களுள் ராஜம் கிருஷ்ணனின் மூன்று நாவல்களும் வல்சலாவின் மூன்று நாவல்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டவர்களின் பரிதாபகரமான நிலையையும் சமூகத்தில் இவர்கள் படும் பாட்டையும் விளக்கும் கீழ்க்காணும் நாவல்கள் மட்டுமே ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

ராஜம் கிருஷ்ணன் – 1. குறிஞ்சித்தேன்
2. கரிப்பு மணிகள்
3. அலைவாய்க்கரையில்

வல்சலா – 1. ஆக்னேயம்
2. நெல்லு
3. கூடமன்கொல்லி

இந்த ஆறு நாவல்களும் ஆய்வு எல்லையாக அமைந்துள்ளன.

## கருதுகோள்

மக்களின் பிரச்சனைகளை உலகம் அறிந்து நிரந்தரமான தீர்வு காணும் நோக்கம் உயிர்நாடியாக அமைந்துள்ளது.

குடும்பத்திலும் சமூகத்திலும் பாதிக்கப்பட்டவர்களின் வேதனை–களும் வெற்றிகளும் மானுடச் சமூகத்தில் காணும் அவலங்களுக்கு எதிராகக் குரல் கொடுத்து அவற்றைத் துடைத்தெறியும்.

மேலாளர்களும் அடியான்களும் விடியலைக் காணும் நேரம் வரும்.

## முதன்மைச் சான்றாதாரங்கள்

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ள மூன்று தமிழ் நாவல்களும் மூன்று மலையாள நாவல்களும் முதன்மைச் சான்றாதாரங்களாகப் பயன்–படுத்தப்பட்டுள்ளன.

## துணைமைச் சான்றாதாரங்கள்

நாவல்கள் பற்றிய திறனாய்வு நூல்கள், தமிழிலும், ஆங்கிலத்–திலும், மலையாளத்திலும் வெளிவந்துள்ள ஒப்பிலக்கிய நூல்கள், ஆய்வேடுகள், அகராதிகள், ஆய்வுக்கோவைகள் ஆகியன துணைமைச் சான்றாதாரங்களாக அமைந்துள்ளன.

## ஆய்வு அணுகுமுறை

ஒவ்வொரு இயலிலும் கூறப்படும் செய்திகளை விளக்கமாக எடுத்துக் கூறும் போது விளக்க முறைத் திறனாய்வும் இயல்தோறும் நாவலாசிரியர்களின் கருத்துக்களை ஒப்பிடும் போது ஒப்பீட்டு அணுகுமுறையும் சமுதாயச் செய்திகளைக் கூறும் போது சமுதாய இயல் அணுகுமுறையும் இவ் ஆய்வின் ஆய்வு அணுகுமுறைகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## ஆய்வு நடை

ஆய்வேட்டில் இயன்றவரை தூய தமிழ்நடையே கையாளப்பட்டுள்ளது. பாத்திரங்கள், படைப்பாளிகள், திறனாய்வாளர்களின் பெயர்கள் அப்படியே தரப்பட்டுள்ளன. மலையாள நாவல் கருத்துக்கள், மேற்கோள் ஆகியன ஆய்வாளரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மிக அரிதான நிலையில் திறனாய்வுக்குப் பயன்படுத்தப்படுகின்ற கலைச்சொற்கள், பிறமொழிச் சொற்களாக இருப்பின் அவை அவ்வாறே ஆய்வேட்டில் இடம்பெற்றுள்ளன.

## ஆய்வு அமைப்பு

இவ் ஆய்வு முன்னுரை, முடிவுரை நீங்கலாக ஐந்து இயல்களைக் கொண்டுள்ளது.

| | |
|---|---|
| இயல் 1 | ஒப்பீட்டாய்வும் பயன்பாடும் |
| இயல் 2 | தலைமைப் பாத்திரங்களில் பெண்கள் |
| இயல் 3 | தலைமைப் பாத்திரங்களில் ஆடவர் |
| இயல் 4 | நம்பிக்கைகளும் சடங்குகளும் |
| இயல் 5 | நாவல்கள் காட்டும் சமுதாயம் |

ஒவ்வொரு இயலிலும் கண்ட முடிவுகள் அந்தந்த இயலின் இறுதியில் தொகுத்தும் ஒப்பீடு செய்தும் தரப்பட்டுள்ளன. இயல்களின் இறுதியில் முடிவுரையும் அதனைத் தொடர்ந்து பின்னிணைப்புகளும் இடம்பெறுகின்றன.

## முன்னுரை

ஆய்வுத் தலைப்பு, ஆய்வுப் பொருள், ஆய்வு நோக்கம், ஆய்வு முன்னோடிகள், ஆய்வு எல்லை, ஆய்வின் கருதுகோள், முதன்மை, துணைமைச் சான்றாதாரங்கள், ஆய்வு அணுகுமுறை, ஆய்வு நடை, ஆய்வு அமைப்பு ஆகியன முன்னுரையில் இடம்பெறுகின்றன.

## இயல் 1 ஒப்பீட்டாய்வும் பயன்பாடும்

இரு வேறு படைப்புகளை ஒப்பிட்டு ஆய்வு செய்யும் போது இலக்கியப் பண்புகளும் சமூகப் போக்குகளும் உணர்த்தும் ஒரு புது உலகைக் காணலாம். அவற்றில் அடிநாதமாக இழையோடும் செய்திகளையும் ஒருமைப்பாட்டுணர்வினையும் உணரலாம். இலக்கியங்களின் ஒப்பீட்டாய்வு தரும் பயன்பாடுகள் அவற்றை உலக இலக்கியங்களுடன் இணைக்கின்றன.

## இயல் 2 தலைமைப் பாத்திரங்களில் பெண்கள்

ராஜம் கிருஷ்ணனின் நாவல்களில் வரும் பெண் மாந்தர்கள் குடும்பப் பாங்குடன் இணைந்தவர்கள். குடும்ப ஒற்றுமையினையும் மேன்மை–யையும் விரும்புபவர்கள். தங்களால் குடும்பத்திற்கு ஓர் இழுக்கு வந்துவிடக் கூடாது என்றும் நினைப்பவர்கள். அதே நேரம் நியாயத்துக்காகப் போராடு–பவர்கள். சமூகத்தில் தங்கள் உரிமைகளை விட்டுக்கொடுக்காதவர்கள். நீதிக்காகக் குரல் கொடுப்பவர்கள். இப்பாத்திரங்கள் தான் நாவல்களையே இயக்குகின்றன.

வல்சலாவின் நாவல்களில் வரும் பெண் பாத்திரங்கள் வறுமை-யிலும் வேதனையிலும் தனிமையிலும் சிக்கி உழலுபவர்கள். எதிர்நீச்சல் போடும் தைரியசாலிகள். தேவைகளுக்காகத் தன்மானத்தை விற்காதவர்கள். இப்பாத்திரங்கள் நாவல்களின் முதுகெலும்பாக இருக்கின்றன. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ள இரு நாவலாசிரியர்களினுடையவும் நாவல்கள் வழிநின்று இவ் இயல் கருத்துக்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

## இயல் 3 தலைமைப் பாத்திரங்களில் ஆடவர்

பெண் மாந்தர்களின் இன்ப துன்பங்களில் பங்கு கொள்ளும் பாத்திரங்களே இரு நாவலாசிரியர்களும் படைத்திருக்கும் ஆடவர் பாத்திரங்கள். பெண்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண முயல்கிறார்கள்; உதவுகிறார்கள். முடியாத நிலையில் தனியாகப் போராடவும் தயாராகிறார்கள். மேற்கூறிய இரு நாவலாசிரியர்களினுடையவும் ஆறு நாவல்களின் அடிப்படை-யில் இவ் இயலில் கருத்துக்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

## இயல் 4 நம்பிக்கைகளும் சடங்குகளும்

பண்பாட்டுக் கூறுகளில் முக்கிய இடம் வகிப்பவை நம்பிக்கை-களும் சடங்குகளும் ஆகும். வாழ்வில் உணவு, உடை, தொழில், கல்வி, அறியாமை எனப் பலக் கூறுகளைக் காண்கிறோம். காரண காரியங்களால் சிலவற்றை நம்பியும், காரண காரியங்கள் தெரியாமல் வழி வழியாய் வரும் சில சடங்குகளைச் செய்தும் மக்கள் வாழ்வு முன்னேறுகிறது. ராஜம் கிருஷ்ணனும் வல்சலாவும் காட்டும் குறிஞ்சி நில, நெய்தல் நில, மலைவாழ் மக்களின் நம்பிக்கைகளும் சடங்குகளும் ஆறு நாவல்களின் வழிநின்று ஆராயப்-பட்டுள்ளன.

## இயல் 5 நாவல்கள் காட்டும் சமுதாயம்

சமுதாயத்தில் இருப்பவர்கள் இல்லாதவர்கள் என்ற இரு நிலை இருக்கிறது. வறுமையில் சிக்கி உழலுபவர்களும் வசதியில்லாதவர்களும் வளமையிலும் வசதியிலும் இருப்பவர்களின் தயவில் வாழ வேண்டிய நிலை. இல்லாதவர்கள் பெண்மைச் சுரண்டல், பொருளாதாரச் சுரண்டல் எனப் பல்வேறு சுரண்டல்களுக்கும் ஆளாகிறார்கள். ராஜம் கிருஷ்ணனும் வல்சலாவும் தங்கள் நாவல்களில் காட்டும் சமுதாயங்கள் இவ் இயலில், ஆறு நாவல்களின் அடிப்படையில் ஆராயப்பட்டுள்ளன.

## முடிவுரை

மேற்கூறிய இயல்களில் கண்டறியப்பட்ட முடிவுகள் இப்பகுதியில் தொகுத்து வழங்கப்படுகின்றன. இருவேறு மொழி படைப்பாளிகளின் இலக்கியங்களை ஒப்பிட்டு ஆய்வு செய்யும் போது மக்கள் குரலை உலகக் குரலாகக் கேட்கச் செய்யும் நிலைக்கு அவை உயர்ந்து பயன்களைத் தரும் என்ற எண்ணம் உறுதிப்படுகிறது.

## பின்னிணைப்புகள்

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆறு நாவல்களின் கதைச் சுருக்–கங்களும் முதலில் கொடுக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து நாவலாசிரியர்களின் வாழ்க்கைக் குறிப்புகளும், ஆய்வுக்குப் பயன்பட்ட தமிழ், மலையாள, ஆங்கில நூற்களின் பெயர்களும் அகராதிகளும், ஆய்வேடுகளும், அகர வரிசைப்–படுத்தப்பட்டு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.